செய்தி வெளியீடு எண்:093 நாள் :26.02.2015

# அரசுத்தேர்வுகள் இயக்ககம்

வருகிற 05.03.2015 தொடங்கி 31.03.2015 வரை நடைபெறவுள்ள மேல்நிலைப் பொதுத் தேர்வுகள் மற்றும் 19.03.2015 முதல் 10.04.2015 வரை நடைபெறவுள்ள இடைநிலைப் பொதுத் தேர்வுகள் தொடர்பாக தேர்வுப் பணிகள் குறித்து அனைத்து ஆய்வு அலுவலர்களுக்குமான அறிவுரைக்கூட்டம் இன்று 25.02.2015 மாண்புமிகு தமிழக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்களின் தலைமையில், பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.தா.சபீதா, இ.ஆ.ப. அவர்களது முன்னிலையில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய மாநாட்டுக் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும், முதன்மைக் கல்வி அலுவலர்கள், அனைவருக்கும் கல்வித் திட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள், மெட்ரிக் பள்ளி ஆய்வாளர்கள், ஆங்கிலோ இந்திய ஆய்வாளர், மாவட்ட ஆசிரியர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள், தேர்வுத்துறை மண்டலத் துணை இயக்குநர்கள், மண்டலச் செயலாளர்கள், புதுச்சேரி இணை இயக்குநர்(கல்வி) காரைக்கால் முதன்மைக் கல்வி அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பள்ளிக் கல்வித் துறையைச் சார்ந்த அனைத்து இயக்குநர்கள் மற்றும் இணை இயக்குநர்களும் மேற்படி அறிவுரைக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழகப் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தமது உரையில், மார்ச் 2015 மேல்நிலைத் தேர்வினை 3,90,753 மாணவர்களும், 4,52,311 மாணவிகளும் ஆக மொத்தம் 8,43,064 பள்ளி மாணவர்கள் தேர்வெழுதவுள்ளனர். 10ம் வகுப்புத் தேர்வினைப் பொறுத்தவரை 5,40,505 மாணவர்களும், 5,32,186 மாணவிகளும் ஆக மொத்தம் 10,72,691 பள்ளி மாணவர்கள் தேர்வெழுதவுள்ளனர் என தெரிவித்தார். மாணவர்களும் அனைத்து ஆய்வு அலுவலர்களும் பொறுப்புடனும், கவனத்துடனும் தேர்வுப் பணிகளில் ஈடுபடுமாறும், எவ்வித முறைகேடுகளும் தவறுகளும் நிகழாத வண்ணம் அனைத்து நிலைகளிலும் கண்காணிப்புப் பணியினை மேற்கொண்டு தேர்வுகளை நடத்தி முடிக்க வேண்டுமென்று அறிவுரைகள் வழங்கினார். மேலும் தேர்வெழுதும் மாணவர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தரப்படவேண்டுமென்றும் தெரிவித்தார்.

..2..

பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்கள் அனைத்து ஆய்வு அலுவலர்களும், தமது மாவட்டத்தில் அமைந்துள்ள அனைத்து வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களிலும் முழுமையான பாதுகாப்பு வசதிகளை உறுதி செய்யுமாறும், மார்ச் 2015 மேல்நிலைப் பொதுத் தேர்விற்கு 2,382 பள்ளிகளும், 10ம் வகுப்புப் பொதுத் தேர்விற்கு 3,298 பள்ளிகளும் தேர்வு மையங்களாக செயல்படவுள்ளதாகத் தெரிவித்தார். மேலும், இத்தேர்வுப் பணிகளுக்காக சுமார் 1,00,000 பணியாளர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள் எனவும், அனைத்துத் தேர்வு மையங்களிலும் அடிப்படை வசதிகளான வெளிச்சம், காற்றோட்ட வசதி, தளவாட வசதிகள் ஆகியவற்றினை உறுதி செய்யுமாறும், தேர்வு மையங்களுக்கு குறிப்பிட்ட வழித்தடங்களில் பாதுகாப்பான முறையில் வினாத்தாட்களை கொண்டு சென்று ஒப்படைப்பது குறித்த அறிவுரைகளையும் தமது பேருரையில் வழங்கினார்.

மேற்படி கூட்டத்தில் பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் திரு.எஸ்.கண்ணப்பன் வரவேற்புரை வழங்கினார். அனைவருக்கும் கல்வித் திட்ட இயக்குநர் திரு.அறிவொளி, மெட்ரிக் பள்ளிகள் இயக்குநர் திரு.பிச்சை, தொடக்கக் கல்வி இயக்குநர் திரு.இளங்கோவன், மாநில கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் திரு. இராமேஸ்வர முருகன், ஆகியோர் சிறப்புரையாற்றினர். தேர்வுகள் துறை இயக்குநர் திரு.கு.தேவராஜன் விளக்கவுரையாற்றினார். தேர்வுத் துறை இணை இயக்குநர் (பணியாளர்) திரு.ப.இராமராஜ் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

ஒம்/–

**அரசுத் தேர்வுகள் இயக்குநர்**

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**